தினமலர் நமது மலர்
வாசகர்களே சொல்லுங்க: உங்கள் பகுதி பிரச்னைகளை 98423 70262 என்ற வாட்ஸ்அப்பில் எண்ணில் தெரிவியுங்கள். அவற்றுக்கு தீர்வுகாண, தினமலர் துணைநிற்கும்.
4.7.2026
திருவண்ணாமலை

முற்றுகை

- நிதி மோசடி நபருக்கு போலீசார் உடந்தை என குற்றச்சாட்டு
- பணத்தை மீட்டுத்தரக் கோரி கலெக்டர் ஆபீஸ் முன் போராட்டம்

■ திருவண்ணாமலை, ஜூலை 4-

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் தனியார் நிதி நிறுவனம் இயங்கி வந்தது.

இவர்கள் திருவண்ணாமலை, வேலூர், ராணிபேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உட்பட பல மாவட்டங்களில்பல சிறு சேமிப்பு திட்டங்களை அறிவித்தது.

இதில் பல ஆயிரம் பேர் இணைந்திருந்தனர். மாதந்தோறும் ரூ. 100 முதல் ரூ.1500 வரை பல் வேறு சேமிப்பு திட்டத்தில் பணம் செலுத்தி வந்தனர். இவர்களிடம் வாடிக்கையாளர்களை சேர்க்க 500 க்கும் மேற்பட்ட ஏஜன்டுகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பொதுமக்களிடம் பணம் வசூல் செய்திருந்தனர்.

இந்நிலையில், முதிர்ச்சியடைந்தவர்களுக்கு பணம் கட்டிய வாடிக்கையாளர்களுக்கு அறிவித்தபடி எந்தவித பொருட்களையும் வழங்காமலும், பணத்தை திருப்பி தராமல் இழுத்தடித்தனர். இதுதொடர்பாக பலமுறை எஸ்பி அலுவலகம், பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்துக்கு புகார்கள் வந்தன.

இதையடுத்து அதன் பேரில் நிதிநிறுவன உரிமையாளர் அல்தாப் கைது செய்யப்பட்டு பிறகு ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்து வெளியே வந்த அவர் மீண்டும் வெவ்வேறு பெயரில் நிறுவனங்களை தொடங்கி ஏஜன்டுகளை நியமனம் செய்ததுடன், முதலில் கட்டி ஏமாந்தவர்களுக்கும் மீண்டும் பணம் கொடுத்தால் திருப்பித் தருகிறேன் என்று ஆசை வார்த்தை கூறியதால் பல கோடி ரூபாயை தற்பொழுது சுருட்டி உள்ளதாக கூறப்படுகிறது. பணத்தை சொன்னபடி தராமல் தங்களை அலைக்கழித்து வருவதாக கூறி 200க்கும் மேற்பட்ட ஏஜன்டுகள் திருவண்ணாமலை எஸ்பி அலுவலகத்தை முற்றுகை யிட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஏஜன்டுகளிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் நிதி நிறுவன உரிமையாளருக்கு உடந்தையாக செயல்படுவதாகவும், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, தங்களது பணத்தை மீட்டு தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். போலீசாரிடம் பேச்சு வார்த்தை உடன்பாடு ஏற்படாததால் பாதிக்கப்பட்ட ஏஜன்டுகள் பொருளாதார குற்றப்பிரிவு போலீசாரை கண்டித்து கலெக்டர் அலுவலகம் எதிரே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு வந்த போலீசார் ஏமாற்று பேர்வழிகள் மீது உரிய விசாரணை நடத்தி கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த பிறகே போராட்டம் கைவிடப்பட்டது.

திருவண்ணாமலை அரசு ஐடிஐயில் வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் முன்னணி தனியார் நிறுவனங்களில் பயிற்சியாளர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை பெற்ற பயிற்சியாளர்களுடன் கலெக்டர் வந்தனா கார்க் உட்பட பலர்.

பழம்பேட்டை திரவுபதி அம்மன் கோயிலில் மழை வேண்டி நடந்த 108 குட ஜலாபிஷேகத்தை முன்னிட்டு, பெண்கள் தலையில்புனித நீர் குடங்களை சுமந்து ஊர்வலம் வந்தனர்.

திரவுபதி அம்மனுக்கு 108 குட ஜலாபிஷேகம்

■ சேத்துப்பட்டு, ஜூலை 4-

சேத்துப்பட்டு, பழம் பேட்டைதிரவுபதி அம்மன் கோயிலில், தமிழகம் முழுவதும் பருவமழை போதிய அளவில் பெய்யாததாலும், கோடை வெப்பத்தின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதாலும், மழை பெய்ய வேண்டியும் சிறப்பு வழிபாடு மற்றும் 108 குட ஜலாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

இதையொட்டி பழம் பேட்டை, கண்ணனூர் பகுதியில் இருந்து திரளான பெண்கள் மஞ்சள், வேப்பிலை, நறுமண பொருட்கள் கலந்து நிரப்பப்பட்ட குடங்களை தலையில் சுமந்து, பம்பை, உடுக்கை முழங்க ஊர்வலமாக கோயிலுக்கு வந்தனர். பின்னர், அம்மனுக்கு 108 குட ஜலாபிஷேகம் மற்றும் பாலாபிஷேகம் சிறப்பு பூஜைகளுடன் நடைபெற்றது.

தொடர்ந்து மகாபாரத சொற்பொழிவு நடைபெற்றது. விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இரவு கட்டைக்கூத்து நாடகமும் நடைபெற்றது. இதில் கற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். ஏற்பாடுகளை பழம் பேட்டை, கண்ணனூர் பகுதிகளை சேர்ந்த 10 கட்டளைதாரர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.

சாலைகள் அளவிடும் பணி துவக்கம்

■ வெம்பாக்கம், ஜூலை 4-

தமிழக முழுவதும் உள்ள பஞ்.களில் உள்ள சாலைகள் தார் சாலைகளா, பேவர் பிளாக் சாலைகளா, மண் சாலைகளாக உள்ளதா என அளவிடும் பணி தற்போது நடந்து வருகிறது. அதன்படி வெம்பாக்கம் தாலுகாவில் உள்ள 64 பஞ்.களில் இப்பணி தற்போது நடந்து வருகிறது கிராம பஞ். கிளர்க்குகள், துப்புரவு பணியாளர்களுடன் இணைந்து இப் பணியை நடத்தி வருகின்றனர். இவர்கள் கிராமத்தில் உள்ள தெருக்களை அளவிடுவது மட்டுமின்றி அந்த தெருக்களில் உள்ள சாலைகள் எந்த வகையாக சாலையாக உள்ளது என கணக்கிட்டு வருகின்றனர்.

இதன் மூலம் கிராமப் புறங் களில் உள்ள சாலைகள் நீள, அகலங்கள் மற்றும் எந்த வகையான சாலையாக உள்ளது என வும் கிராமப்புற மண் சாலைகளை விரைவில் பேவர் பிளாக் சாலையாகவோ அல்லது தார் சாலையாக மாற்ற வழிவகைகள் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

3 பெண்கள் மாயம் : பெற்றோர் புகார்

■ செய்யாறு, ஜூலை 4-

செய்யாறு அருகே அடுத்தடுத்த கிராமப் பகுதிகளில் 3 இளம் பெண்கள் மாயமாகினர். பெற்றோர் போலீசில் புகார் செய்துள்ளனர். வடுகப்பட்டு: சந்திரசேகர் செங்கல்சூளைத் தொழிலாளி. இவரது மகள் சந்தியா (19). பிளஸ் 2 படித்து பெற்றோருடன் இருந்தவர். 30ம்தேதி வெளியே கடைக்கு சென்று வருவதாக போனார் வீடு திரும்பவில்லை. பல்லிமேட்டுநகர்: கன்பனா தனியார் கம்பெனி தொழிலாளி மகள் மாலினி(19). 30ம் தேதி கல்லூரி செல்வதாக சென்றவர் வீடு திரும்பவில்லை.

கண்டிவாக்கம்: கூலித் தொழிலாளி பாண்டியன் மகள் பாரதி(18). 1ம் தேதி செய்யாறு தனியார் நர்சிங் கல்லூரி சென்றவர் வீடு திரும்பவில்லை. அக்கம், பக்கம், உறவினர் வீடுகளில் தேடியும் தங்களின் மகள் கிடைக்காததால் பெற்றோர் செய்யாறு போலீசில் புகார் செய்துள்ளனர். இன்ஸ்பெக்டர் நரசிம்மஜோதி வழக்குப்பதிந்து விசாரித்து வருகிறார்.

பெருந்துறைப்பட்டில் கதவு உடைத்து 5 பவுன் நகை, ரூ.10 ஆயிரம் திருட்டு

■ தண்டராம்பட்டு, ஜூலை 4-

தண்டராம்பட்டு அடுத்த பெருந்துறைப்பட்டு கிராமத்தைச் சார்ந்த லூர்தசாமி ஒகூர் டீவிஎஸ் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி ஆரோக்கிய அருட்செல்வி (32) திருவண்ணாமலையில் உள்ள மளிகை கடையில் வேலை பார்த்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் உள்ளே கதவை பூட்டிவிட்டு உள்ளே தூங்கிக் கொண்டிருந்தார். மம்பநபர் கதவை உடைத்து உள்ளே சென்று பீரோ சாவியை எடுத்து திறந்து பீரோவில் இருந்த நகை மற்றும் பணம் திருடி சென்றுள்ளார். அதிகாலை எழுந்து பார்த்தபோது பீரோ திறந்து இருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். சென்று பார்த்த போது ஐந்து பவுன்நகை மற்றும் 10 ஆயிரம் ரூபாய் பணம் திருடு போனது தெரிய வந்தது.

பெருந்துறைப்பட்டு கிராமத்தில் திருட்டு நடந்த வீட்டை இன்ஸ்பெக்டர் பொன்ராஜ் பார்வையிட்டு விசாரணை நடத்தினார்.

இது குறித்து ஆரோக்கிய அருட்செல்வி வாணாபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் அளிக்கப்பட்டது. தகவல் அறிந்த ரூரல் டிஎஸ்பி ராஜா, தண்டராம்பட்டு இன்ஸ்பெக்டர் பொன்ராஜ் மற்றும் போலீசார் நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர். பின்பு கைரேகை நிபுணர் வரவழைக்கப்பட்டு தடயங்களை சேகரித்தனர். மோப்பநாய் வீரா வரவழைக்கப்பட்டு சிறிது தூரம் ஓடி நின்று விட்டது. யாரையும் கவ்வி பிடிக்கவில்லை. போலீசார் வழக்கு பதிவு செய்து மர்ம நபர்களை தேடி வருகின்றனர்.

வேலை செய்யும் நிறுவனத்துக்கு பெருமை சேர்க்க வேண்டும்

அரசு ஐடிஐ மாணவர்களுக்கு கலெக்டர் 'அட்வைஸ்'

■ திருவண்ணாமலை, ஜூலை 4-

திருவண்ணாமலை அரசு ஐடிஐயில் 2026ம் ஆண்டு பயிற்சி நிறைவு செய்த 285 பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் 14 முன்னணி தனியார் நிறுவனங்கள் பங்கேற்பு வளாக நேர்காணலில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழா நடந்தது.

பணி நியமன ஆணைகளை வழங்கி கலெக்டர் வந்தனா கார்க் பேசியதாவது:

தொழில் பயிற்சி பெற்று பல்வேறு இடங்களுக்கு பணிக்கு செல்லும்போது பணியில் கவனம் செலுத்தி உங்கள் திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். கடுமையாக உழைத்தால் உயர்ந்த நிலைக்கு செல்லலாம் என்ற மனப்பாங்கோடு வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும்.

உங்கள் பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் வகையிலும், வேலை செய்யும் நிறுவனத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையிலும் பணியாற்றி சிறக்க வாழ்த்துவதாக பேசினார்.

அரசு ஐடிஐயில் பயிற்சி மற்றும் பாடத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாகனத்தை கலெக்டர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் சப்கலெக்டர் (பயிற்சி) சந்தோஷ் குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

ஆயில் நிறுவனத்தில் லேப்டாப் திருட்டு

சிக்கினார் ஆரணி நபர்

■ வாலாஜாபேட்டை, ஜூலை 4-

வாலாஜாபேட்டையைச் சேர்ந்தவர் ரமேஷ் (63). இவர் வேலூர் மாவட்டத்தில் கூடுதல் எஸ்பியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் வாலாஜாவில் பைபாஸ் ரோட்டில் ஆயில் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி அதில் மரச்செக்குகளை அமைத்து ஆயில் விற்பனை செய்து வருகிறார். மேலும் அந்நிறுவனத்தின் மாடி பகுதியில் குடியிருந்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த 30ம் தேதி இரவு பின்பக்க ஜன்னல் கதவை உடைத்துக்கொண்டு அதன் வழியாக உள்ளே நுழைந்த மர்ம நபர் உள்ளே கொள்ளை அடிக்க முயற்சித்ததில் அங்கு ஏதுவும் கிடைக்காததால் அங்கு இருந்த லேப்டாப்பை எடுத்து சென்று விட்டார்.

இதுகுறித்து ரமேஷ் வாலாஜாபேட்டை போலீசில் புகார் செய்தார். சப் இன்ஸ்பெக்டர் ஜெயகாந்தன் வழக்கு பதிவு செய்து அந்த நிறுவனத்தில் இருந்த சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்ததில் அந்த சம்பவத்தில் ஈடுபட்டது பிரபல கொள்ளையன் ஆரணி, பையூர் காலனியைச் சேர்ந்த ரஞ்சித்குமார் (35) என்பதும் தெரியவந்தது. இதையடுத்து வாலாஜா-சோளிங்கர் ரோட்டில் சந்தேகப்படும்படியாக இருந்த நபர் ஒருவரிடம் விசாரித்தபோது அவர் முன்னுக்குப்பின் முரணாக பேசினார். இதையடுத்து போலீஸ் ஸ்டேஷனில் அழைத்து வந்து விசாரித்ததில் அவர்தான் ரஞ்சித் குமார் என்பது தெரிய வந்தது. இந்நிலையில் அவரை கைது செய்த போலீசார் அவரிடம் இருந்து திருடிய லேப்டாப்பை மீட்டு வழக்கு பதிவு செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

நண்பரை கொன்றவர் கைது

■ திருவண்ணாமலை, ஜூலை 4-

திருவண்ணாமலை அடுத்த சீலப்பந்தல் களர் கிராமத்தைச் சேர்ந்தவர் முரளி (29). அதேபகுதியைச் சேர்ந்தவர் மாணிக்கவேல் (40). கூலித்தொழிலாளிகளாகிய இருவரும் நண்பர்கள். இருவருக்கும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக சில மாதங்களாக முன்விரோதம் இருந்துள்ளது.

இந்நிலையில், கடந்த 30ம் தேதி வேட்டவலம் சாலையில் மாணிக்கவேல் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு மது போதையில் வந்த முரளி மற்றும் சிலர் மாணிக்கவேலை வழிமறித்து தகராறில் ஈடுபட்டுள்ளனர். ஒரு கட்டத்தில் ஆத்திரமடைந்த முரளி தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் சரமாரியாக மாணிக்கவேலை குத்தி விட்டு தப்பியோடி விட்டார்.

படுகாயமடைந்தவரை அருகில் உள்ளவர்கள் மீட்டு திருவண்ணாமலை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிச்சை பெற்று வந்த மாணிக்கவேல் நேற்று பரிதாபமாக இறந்தார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் முரளியை கைது செய்தனர்.

அரிகரன்

லாரி – டூவீலர் மோதல்: வாலிபர் பரிதாபம்

■ வந்தவாசி, ஜூலை 4-

வந்தவாசி அடுத்த கோட்டுப்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவர் ஆறுமுகம் (50), ஓய்வு பெற்ற ராணுவ வீரர். இவரது மனைவி அலமேலு, நெடுங்குணம் அரசு மேல் நிலைப்பள்ளி தலைமையாசிரியராக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு அரிகரன் (25) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர். பட்டதாரியான அரிகரன், சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

அவரது சகோதரியின் வளைகாப்பு விழா நாளை நடைபெற இருந்ததால், அதில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் சொந்த ஊருக்கு வந்திருந்தார். நேற்று, கோட்டுப்பாக்கத்தில் இருந்து சின்ன கோழிப்புலியூர் கூட்டுச் சாலை நோக்கி டூவீலரில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, வந்தவாசி சேத்துப்பட்டு சாலையில், வந்தவாசி மார்க்கெட் கமிட்டியில் இருந்து திருவண்ணாமலை நோக்கி நெல் மூட்டைகளை ஏற்றி சென்ற லாரி முன்னால் சென்று கொண்டிருந்தது. அந்த லாரியை முந்தி செல்ல அரிகரன் முயன்றபோது, எதிர்பாராத விதமாக டூவீலர் லாரியின் பின்புற வலது பகுதியில் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட அரிகரன், அந்த இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

தகவலறிந்து வந்த தேசூர் போலீசார், அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து அரிகரனின் தந்தை ஆறுமுகம் கொடுத்த புகாரின் பேரில், தேசூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நேற்றை வெயில் அளவு (டிகிரியில்)
திருவண்ணாமலை
94

கல்வி சேர்க்கை
B.Sc. நர்சிங், MBBS.,
ENGINEERING AI, IT, PHARMACY
Scholarship, Education Loan, Guidance Available
அட்மிஷன் நடைபெறுகிறது
GLOBAL EDUCATION CONSULTANCY
Tiruvannamalai - 606 603
Cell: 7845776026

திருவண்ணாமலை கிளை
பாங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda
15, RR Complex, போலூர் சாலை, திருவண்ணாமலை-606601.
போன் : 04175-250054, Email: tiruvn@bankofbaroda.bank.in, Web : bankofbaroda.bank.in
(baninket போர்டலில் நடத்தப்படும் ஒரத்திற்தான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் கருக்கமான விற்பனை அறிவிப்பு)
அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை II-பிரிவின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடனீட்டுக் கொத்துகளுக்கு அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவெனில், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவனிக்கும் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், பேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : திருமதி. பேபுவேனேஸ்வரி, தெ.29/13, அவராகாடு தெரு, திருவண்ணாமலை - 606601 மற்றும் ஜாமீன்தாரர் திரு. கோப்பமணி, தெ.29/13, அவராகாடு தெரு, திருவண்ணாமலை - 606601.
Term Loan A/c.No.36790600004257, நிலுவை தொகை ரூ.16,41,964.31/-
மேலும் 30.06.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் விலைவங்கங்கள் இருப்பின்
சொத்து எண் 1: திருவண்ணாமலை பதிவு மாவட்டம் மற்றும் தாலுக்கா, திருவண்ணாமலை இணை II சார் பதிவு மாவட்டம், வெங்கையவேலூர் கிராமத்தில் புஞ்சை சர்வே எ. 55/2, 54/1, மற்றும் 55/1 (புதிய சர்வே எ. 55/2A1 மற்றும் 55/2A5) ஏக்கர் 1.90 ½ சென்டும் 0.03 சென்ட் பரப்பளவு. நான்கு எல்லைகள்: சம்பத் அவர்களின் சொத்திற்கு கிழக்கு, ராமலெயம் அவர்களின் சொத்திற்கு மேற்கு மற்றும் தெற்கு, தொப்பணன் அவர்களின் சொத்திற்கு வடக்கு.
சொத்து எண் 2: திருவண்ணாமலை பதிவு மாவட்டம் மற்றும் தாலுக்கா, திருவண்ணாமலை இணை II சார் பதிவு மாவட்டம், வெங்கையவேலூர் கிராமத்தில் புஞ்சை சர்வே எ. 55/2, (புதிய சர்வே எ. 55/2A1 மற்றும் 55/2A5) இதன் பரப்பளவு 0.04 சென்டுகள். நான்கு எல்லைகள்: ராமலெயம் அவர்கள் வைத்துக் கொண்ட சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு, சாலைக்கு தெற்கு, சுப்பரமணியன் அவர்களின் சொத்திற்கு வடக்கு. இந்த சொத்தானது, திரு. கோப்பமணி (ஜாமீன்தாரர்) பெயரில் உள்ளது.
சுவாதீன நிலை: ஆக்கப்பூர்வ நிலை
நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 25,00,000/- பேவணித் தொகை ரூ. 2,50,000/- ஏல உயர்வு தொகை ரூ. 25,000/-
மின் ஏல தேதி மற்றும் நேரம் 10.08.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்
சொத்தினை பார்வையிடும் தேதி : 15.07.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
பேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 10.08.2026
விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction என்ற இணையுதள இணைப்பை பார்க்கவும்/வதைகதரவும். மேலும் ஏஜதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செல்: 04175-250054, 9677075502 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.
தேதி : 02.07.2026
இடம் : திருவண்ணாமலை
அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா